[1973 நவம்பர் 24

நிலக்கடலை நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தல்.

* 384 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :
திரு. ஆ. பரந்தாமன் :
திரு. என். டென்னிஸ் :
திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கடலை நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அதிகாரம் அளிக்க வேண்டும் என மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கு மத்திய அரசு அளித்த பதில் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) 1972-ல் நிலவிய வறட்சி நிலைமை காரணமாக, நிலக்கடலை உற்பத்தி பாதிக்கப்பட்டு விட்டது எனவும் அதனால் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் இந்தியா முழுவதிலும் நிலக்கடலை விலை உயர்ந்துள்ளதெனவும், நாட்டின் எண்ணெய் பொருளாதார நிலைமையைக் கருதி தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலங்களுக்குச் செல்லும் நிலக்கடலை நடமாட்டத்தைத் தடுப்பதற்கு ஒப்புதலளிக்கக் கோரியுள்ளோம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அந்த ஒப்புதல் கோரியதற்கு மத்திய அரசு என்ன பதில் அளித்தது? மத்திய அரசு பதில் அளிக்கவில்லையென்றால், நெல்லை கொள்முதல் செய்வதைப்போல், நிலக்கடலையை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்தால், நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தலாம், எண்ணெய் விலை ஏற்றத்தையும் குறைக்கலாம். ஆகவே, அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் பதிலிலேயே கூறி இருக்கிறேன். கடலையை வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதற்கான அதிகாரத்தை மாநில சர்க்காருக்குக் கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்கா

1973 நவம்பர் 24]

ளைக் கேட்டிருக்கிறோம். அதற்கு அவர்கள் இன்னும் சரியான முறையிலே பதில் தரவில்லை. வேண்டுமானால், நாங்கள் எழுதிய கடித விவரங்களை இங்கே நான் சொல்கிறேன்.

17—3—1973-ல் தமிழ்நாடு அரசு, வேர்க்கடலையை இந்த மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்வதைத் தடை செய்ய வேண்டுமென்று மத்திய அரசிடம் கோரியது. 13—5—1973-ல் மத்திய அரசு போக்குவரத்து தடை விதிக்க இயலாது என அறிவித்தது. 12—4—1973-ல் தமிழ்நாடு அரசு வேர்க்கடலை வணிகத்தைக் கட்டுப்படுத்தி விதிப்பு செய்யும் கட்டுப்பாடு உத்தரவை மத்திய அரசுக்கு அனுப்பியது. 27—9—1973-ல் மத்திய அரசிடமிருந்து அந்த உத்தரவை அங்கீகரித்தும் ஆனால் விதிப்பு சதவிகிதத்திற்கு கொள்முதல் செய்யும் முன் விலக்கும் மத்திய அரசின் தனி அதிகாரம் பெற்றுத்தான் ஆகவேண்டுமென்ற கருத்து வந்தது. மீண்டும் 6—10—1973 அன்றும் 31—10—1973 அன்றும் தமிழ் நாடு அரசு, இதற்கான லெவி விதிப்பையும் நாம் நிர்ணயித்த விலையையும் அனுப்பி இருக்கிறது. இன்னும் இதுவரையிலே பதில் வரவில்லை.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருந்து நிலக்கடலை பம்பாய் நகரத்திற்கு அனுப்பப்படுகிற காரணத்தினலேதான் இங்கே எண்ணெயினுடைய விலை ஏறிக்கொண்டிருக்கிறது. இதை முன்னிட்டுத்தான் நம்முடைய அரசும் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது. ஆனால் மத்திய அரசு இதுவரையில் ஒரு நல்ல முடிவை எடுக்கவில்லை. நம்முடைய தமிழ்நாட்டுக்குத் தேவையான நிலக்கடலையை ஒதுக்கிவிட்டு மீதியிருந்தால் அதை வேண்டுமானால் வெளிமாநிலங்களுக்கு அனுப்பலாம் என்ற முறையில் நம்முடைய அரசு யோசனை சொல்லுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நம்முடைய மாநிலத்திற்குத் தேவைக்குப் போக அதிகமாக இருந்தால் அதையெல்லாம் எடுத்துச் செல்லலாம் என்றுதான் சொல்லியிருக்கிறோம். ஆனால் நம்முடைய தேவைக்கு வேண்டியதை நாம் லெவி போட்டு எடுத்துக்கொள்ளலாம் என்று நாம் அதற்கான அதிகாரத்தைத் தான் கேட்டிருக்கிறோம், அதை அவர்கள் கொடுக்கவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சுமார் எவ்வளவு டன்கள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன? அப்படி வெளிமாநிலங் களுக்கு அனுப்பப்படுகின்றவற்றிற்கு அதிகமான விற்பனைவரியைப் போட்டால் இதை ஒருவாறு சமாளிக்கலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, எவ்வளவு என்று கணக்குச் சொல்வதற்கு நாம் தடை விதித்து அதற்கு மேல் எவ்வளவு போகிறது என்று கணக்கு வைத்துக்கொள்வது இல்லை. உற்பத்தியாவதற்குத்தான் கணக்கு இருக்கிறது. அதனுடைய விலையைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்திலேதான் இருமுனைவரியாக இருந்ததை ஒருமுனை வரி யாக ஆக்கியிருக்கிறோம். ஆனால் அப்படியிருந்தும் கடத்தல் காரணமாக 600 ரூபாயாக இருந்த விலை இப்பொழுது 1,200 ரூபா யாக மகாராஷ்டிரத்திலும், குஜராத்திலும் விற்கிறது. இந்த அள விற்கு விலை உயர்ந்திருப்பதால் என்னதான் விலைபோட்டாலும் தடை செய்ய முடியாது. ஆகவே நாம் ஒரு லெவி போட்டு நம் முடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தால் தான் அதைத் தடுக்க முடியும் என்று நினைக்கிறோம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நம்முடைய மாநிலத்திற்குத் தேவை யான எண்ணெய் வித்துக்கள் எவ்வளவு? இங்கு உற்பத்தியாகிற அளவு எவ்வளவு? மத்திய அரசு அதிகாரம் கொடுத்தால் இங்கே யுள்ள தேவையை நாம் பூர்த்தி செய்யமுடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்கான கணக்குகள் எல்லாம் இருக்கின்றன. இப்பொழுது அவை என்னி டத்திலே இல்லை. நமக்கு எவ்வளவு தேவையோ அதை நாம் உற்பத்தி செய்வதில் இருந்து லெவி செய்து கொள்ள அதிகாரம் வேண்டுமென்று எழுதியிருக்கிறோம். அதற்கான கணக்குகள் எல்லாம் இருக்கின்றன, வேண்டுமானால் விவரங்கள் சொல்லலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : எண்ணெயையும் இந்த மாநி லத்திலிருந்து வெளிமாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டு மென்றால் தடை விதிப்பதற்கு அரசாங்கம் ஆணையிட்டிருக்கிறதா? அப்படியானால் அதனுடைய விவரம் என்ன? புண்ணாக்கு வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதற்கு தடையிருக்கிறதா என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எண்ணெய், கடலை, புண்ணுக்கு எதையும் நாம் தடுப்பதற்கு நமக்கு அதிகாரம் கிடையாது. எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள்.

விவசாயிகளுக்கு டீஸல் என்ஜின்கள் வழங்கல்

*385 **வினு—திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ள தன்காரணமாக விவசாயிகளுக்கு ஆயில் என்ஜின்களை கடனுக வழங்கும் சிறப்புத் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) ஆம். தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சாரப் பற்றுக்குறை காரணமாகவும் மற்றும் நடைமுறை சம்பந்தமான தாமதம் முதலிய காரணங்களால் மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கும் விவசாயிகளுக்காக டீசல் என்ஜின்கள் வழங்க அரசு ஒரு திட்டம், மத்திய அரசின் நிதி உதவியுடன் அமுல்படுத்தி வருகின்றது

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நிலவள வங்கிகள் மூலம் வழங்கப்படும் கடன்களுக்கு தமிழ்நாடு அக்ரோ என்சினியரிங் அண்டு சர்விஸ் கோவாப்பரேட்டிவ் பெடரேஷன் எனும் நிறுவனம் டீசல் பம்பு செட்டுகள் வழங்குகிறது. இப்படி வழங்கப்படும் டீசல் என்ஜின்கள் 31—12—1974-க்குள் மின் இணைப்பு கிடைக்கப்படுவதுடன் மின் மோட்டார்கள், டீசல் என்ஜின்களுக்குப் பதிலாக விவசாயிகளுக்கு கூடுதல் செலவில்லாமல் தயாரிப்பாளர்களே வழங்குவார்கள். இத்திட்டப்படி ஒவ்வொரு டீசல் என்ஜினுக்கும் ரூ. 1,000 மானியமாக (subsidy) வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் முழுவதும் 10,000 என்ஜின்கள் இத்திட்டப்படி வழங்க அரசு அனுமதி அளித்திருக்கிறது. இத்திட்டப்படி 15—11—1973 வரை 3,975 டீசல் என்ஜின்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.